கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 244/2018

பிரதிவாதி தரப்பு சாட்சி – 3 ராதிகா திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 27.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதிகா | கிராமம் | |
| க/பெ | தனபால் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 80 |

**<u>பி.வ.சா.3– ராதிகா – முதல் விசாரணை</u>**

இவ்வழக்கில் எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்சமயம் கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்ட சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த இரண்டு வருடங்களாக மேற்படி பணியில் உள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மஞ்சநாயக்கப்பட்டி கிராமம் புல எண்.74 முதல் 77 வரையான நிலங்களில் Topo sketch அசல் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். மேற்படி வரைபடத்தில் சர்வே எண்.75 ற்கு தென்புறத்தில் பாதை உள்ளது. மேற்படி Topo sketch ல் ஒவ்வொரு புல எண்ணிற்குண்டான பாதையானது மாறும். தற்போது உட்பிரிவு செய்யப்பட்ட புல எண்களில் உள்ள பாதை பற்றிய விவரங்கள் மேற்படி Topo sketch ல் இடம் பெறாது. பொதுவாக Topo sketch ல் யாருக்கு யாருக்கு பாதை உள்ளது, அது நடைபாதையா, வண்டிபாதையா என்பதை குறிப்பு செய்யப்படும். மேற்படி Topo sketch ல் சர்வே எண்.77 ல் பாதை காண்பிக்கப்படவில்லை. மேற்படிபுல எண் தற்சமயம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.77 ல் 77/1 முதல் 77/6 வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. புல எண்.77/1 ல் பட்டா எண்.1956 ல் ரா.தங்கமாள் மற்றும் மூன்று நபர்களின் பெயரிலும், புல எண்.77/2 ல் பட்டா எண்.415 ரா.தங்கமாள் பெயரிலும், புல எண்.77/3 பட்டா எண்.528 பொ.பிச்சைமுத்து பெயரிலும, சர்வே எண்.77/4 ல் பட்டா எண்.915 பொ.மாரிமுத்து பெயரிலும், சர்வே எண்.77/5 ல் பட்டா எண்.528 பொ.பிச்சைமுத்து பெயரிலும், சர்வே எண்.77/6 ல் பட்டா எண்.644 மா.பொன்னுசாமி பெயரிலும் அ பதிவேட்டில் உள்ளது. மேற்படி புல எண்களுக்கு அ பதிவேட்டில் பாதை இல்லை. சர்வே எண்.75 ஆனது சர்வே

எண்.75/1 முதல் 75/7 வரை உட்பிரிவாகியுள்ளது. சர்வே எண்.75/1ல் மேற்புறம் மற்றும் வடபுறம் பாதை உள்ளது. மேற்படி பாதை பட்டா எண்.2040ல் ச.முத்துசாமி மற்றும் 5 நபர்கள் பெயரில் பட்டா நிலத்தில் பூஸ்துதி வண்டிபாதையாக உள்ளது. சர்வே எண்.77ற்கு பாதை இல்லை. மேற்படி புல எண்.77 யை உட்பிரிவு செய்த பின்பும் அதில் பாதை எதுவும் இல்லை.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் காட்டப்படும் ஆவணம் மஞ்சநாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்75ற்கான நிலபுல வரைபடத்தின் கணினி நகல் என்றால் சரிதான். மேற்படி நிலபுல வரைபடத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.75ல் ஏழு உட்பிரிவுகளாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.75/1ல் பட்டா நிலத்தில் பூஸ்துதி வண்டி பாதை உள்ளது என்று எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.75/1ன் மேல்புறம் சர்வே எண்.78 மற்றும் 85 ஆகியன உள்ளன என்றால் சரிதான். சர்வே எண்.75/1ன் வடபுறம் சர்வே எண்.77 மற்றும் 76 ஆகியன உள்ளன என்றால் சரிதான். சர்வே எண்.77, 78, 85 மற்றும் சர்வே எண்.75/2, 75/3, 75/4, 75/5, 75/6 இடையே சர்வே எண்.75/1 ல் உள்ள மேற்படி பூஸ்துதி வண்டிபாதை உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.75/1 பாதையை தவிர சர்வே எண்77ற்கு வேறு பாதை இல்லை என்றால் ஆவணங்களின் அடிப்படையில் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டுள்ளது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**